# பாரதிதாசன் பல்கலைக்கழகம்
(Accredited with 'A+' Grade by NAAC in Third Cycle)
திருச்சிராப்பள்ளி–620024

முனைவர்.சு. சீனிவாச ராகவன்
*எம்.ஏ.,எம்.எல்.ஐ.எஸ்ஸி., பி.எச்டி.,*
தேர்வு நெறியாளர்

தொலைபேசி :0431- 2407016 2407060
தொலை நகலி: 0431-2407444
மின்னஞ்சல்: coe@bdu.ac.in
இணையதளம்: www.bdu.ac.in


---

<u>ந.க.எண்.தே.பி/இளநிலை/செய்முறைத்தேர்வுகள/ஏப்ரல் 2020 நாள்: 05.08.2020</u>

பெறுநர்

முதல்வர்,
பல்கலைக்கழக இணைவுபெற்ற அனைத்துக் கல்லூரிகள், (தன்னாட்சி பெறாத கல்லூரிகள்)

அய்யா/அம்மையீர்,

**<u>பொருள்</u>**: தேர்வுப் பிரிவு - ஏப்ரல் 2020 - பல்கலைக்கழக இளநிலை பட்டப்படிப்புப் பாடங்களுக்கான செய்முறைத் தேர்வுகள் நடத்தப் பெறாத பாடங்களுக்கு தமிழ்நாடு அரசாணையின்படி, தேர்வுகளை நடத்தி மதிப்பெண் பட்டியலை பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைக்கக் கோருதல் - தொடர்பாக.

**<u>பார்வை</u>**:
1. இவ்வலுவலக கடித எண்:தே.பி./இளநிலை/செய்முறைத் தேர்வுகள்/ ஏப்ரல் 2020 நாள்:25.01.2020
2. தமிழ்நாடு அரசின் உயர்கல்வித் (கே2) துறையின் அரசாணை(டி) எண்:111 நாள்:27.07.2020.
3. மாண்பமை துணைவேந்தரின் ஆணை நாள்: 05.08.2020

-----

பார்வை 1இல் காணும் கடிதத்தில் பல்கலைக்கழக இணைவு பெற்ற அனைத்துக் கல்லூரிகளின் (தன்னாட்சி பெறாத கல்லூரிகள் மட்டும்) முதல்வர்களை ஏப்ரல் 2020-க்கான இளநிலை பாடங்களுக்கான செய்முறைத் தேர்வுகள் திட்டமிட்டபடி 09.03.2020 முதல் நடைபெற்றுக் கொண்டிருந்த தருணத்தில், கோவிட்-19 என்ற வைரஸ் தொற்று காரணமாக தமிழ்நாடு அரசின் அரசாணையின்படி கல்லூரிகளுக்கு விடுமுறை விடப்பட்டதால், 20.03.2020 முதல் 24.03.2020 வரை (22.03.2020 ஞாயிறு நீங்கலாக) நான்கு நாட்களுக்கான செய்முறைத் தேர்வுகள் அனைத்து கல்லூரிகளிலும் நடத்த இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

அனைத்துக் கல்லூரிகளிலும் B.A., B.B.A., B.Com. பட்டப் படிப்பு மாணவர்களுக்கான செய்முறைத் தேர்வுகள் பார்வை 1இல் காணும் கடிதத்தின்படி, நடத்தி முடித்து பல்கலைக்கழகத்திற்கு மதிப்பெண்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

விடுமுறை காரணமாக, B.Sc. பட்டப்படிப்பு மாணவர்களுக்கு மட்டும் மேலே குறிப்பிட்டுள்ளபடி நான்கு நாட்களில் செய்முறைத் தேர்வுகள் நடத்த இயலவில்லை.

இதுதொடர்பாக, பார்வை 2இல் காணும் தமிழ்நாடு அரசாணையில் நடத்தப்படாத செய்முறைத் தேர்வுகளுக்கு கல்லூரிகளிலிருந்து மதிப்பெண்கள் பெறுவது தொடர்பாக பின்வருமாறு தெரிவித்துள்ளது.

**“செயல்முறை தேர்வு நடத்தப்படாமலிருந்தால் ஆய்வக பதிவேட்டின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படும்.”**

எனவே, B.Sc. பாடப்பிரிவுகளில் செய்முறைத்தேர்வுகள் நடத்தாத பாடங்களுக்கு மட்டும் மேற்குறித்தபடி மதிப்பெண்களை அளித்து, அம்மதிப்பெண்பட்டியலை பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும் தங்கள் கல்லூரியில் பயிலும் அனைத்து மாணவர்களின் மேற்குறித்த தேர்வுகளுக்கான மதிப்பெண்களையும், அகமதிப்பீட்டு மதிப்பெண்களையும் **12-08-2020** தேதிக்குள் இணையதளத்தின் வாயிலாகவும் (exams.bdu.ac.in) மற்றும் அஞ்சல் வழியாகவும் தேர்வு நெறியாளருக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இக்கடிதத்தின் மீது தனிக்கவனம் செலுத்தி உடன் மதிப்பெண்களை அனுப்பிவைத்து மாணவ/மாணவியரின் தேர்வு முடிவுகள் விரைவாக வெளியிட ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது

இக்கடிதத்தைப் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகை அளிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள

**தேர்வு நெறியாளர்**

**நகல்**

இயக்குநர், தகவலியல் மையம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி-24.